(ஓ) செஞ்சி, இராஜேஸ்வரி சர்க்கரை ஆலை தற்காலிக ஊழியர்கள் ஊதிய உயர்வு கோரி போராட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதிக்குட்பட்ட இராஜேஸ்வரி சுகர் மில்ஸ் என்கிற தனியார் சர்க்கரை ஆலையில் தற்காலிக ஊழியர்கள் ஊதிய உயர்வு கோரி போராடி வருகிறார்கள். இதுகுறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்பொருள் எனது ஆய்வில் உள்ளது.*

(ஔ) பெரியகுளம் தொகுதி, கொடைக்கானல் அடிவாரத்தில் காட்டெருமை, பன்றிகளின் நடமாட்டத்தைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் தொகுதி 20,000 ஏக்கர் மாமரங்கள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. கொடைக்கானலின் அடிவாரப் பகுதியில் காட்டெருமைகள், பன்றிகளின் தொந்தரவு அதிகமாக இருக்கிறது. கடந்த 5 ஆம் தேதி காட்டெருமை முட்டி, பாண்டி என்ற நபர் மரணமடைந்திருக்கிறார். அவருடைய குடும்பத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதோடு, அந்தப் பகுதியில் மின் வேலி அல்லது அகழி அமைத்து அந்தப் பகுதி விவசாயிகளையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க அரசு கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

(ஒ) பல்கலைக்கழகங்களில் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் தற்காலிகப் பணியாளர்கள் நியமனம்— *தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் சமூக நீதி அடிப்படையில் 69% இடஒதுக்கீட்டை*

அமலாக்குவதற்குத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது, ஆதரவு அளித்து வருகிறது. அண்மையில், தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் வேளாண்மைத் துறையின்கீழ் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை என்று அழைக்கப்படக்கூடிய Agricultural Technology Management Agency *என்று அழைக்கப்படக்கூடிய ஒரு துறையின்கீழ் வேலைவாய்ப்பிற்காக அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மூலமாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதில் என்ன குறை என்று சொன்னால், நேரடியாக வேலைவாய்ப்பிற்கு அழைப்புக் கொடுக்காமல், பணி நியமன நிறுவனங்களின்மூலம் வேலைவாய்ப்பிற்கு அழைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தவிதமான இட ஒதுக்கீடுகளும் இதில் அறிவிக்கப்படவே இல்லை. தற்காலிகமான வேலையானாலும், நிரந்தர வேலையானாலும் சமூக நீதி அடிப்படையில் தாழ்த்தப்பட்டோருக்கு 19%, பழங்குடியினருக்கு 1%, மிகவும் பின்தங்கியோருக்கு 20%, பிற்படுத்தப்பட்டோருக்கு 30% என்ற அடிப்படையில்தான் கொடுத்திட வேண்டும். அதற்கு நேர்புறம்பாக .... (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவையின் கவனத்தை ஈர்த்திடுங்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *பணி நியமன நிறுவனங்கள்மூலம் இடஒதுக்கீட்டுக் கொள்கைக்குப் புறம்பாக, அதைப் பற்றி எந்தவிதமான அறிவிப்பும் கொடுக்காமல் முறைகேடாக இந்தப் பணி நியமனம் நடைபெற்றிருக்கிறது. எனவே, அதுகுறித்து அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்களா, உடனடியாக அந்தச் செயலை நிறுத்தி வைப்பார்களா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் எழுப்பிய இப்பிரச்சினை குறித்து பதில் அளிப்பார்கள்.*

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005-2006 ஆம் ஆண்டு முதல்* ATMA *திட்டம் தமிழகத்திலே மத்திய, மாநில அரசுத் திட்டமாகச் செயல்பட்டு*

வருகிறது. 2010-2011 ஆம் நிதியாண்டில் ATMA அமைப்புமூலம் செயல்படுத்தப்படும் வேளாண்மை விரிவாக்க மறு சீரமைப்புத் திட்டத்தின்கீழ் வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் விரிவாக்க அமைப்பினை மேம்படுத்தும்பொருட்டு தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களை பணி நியமன நிறுவனங்கள்மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்துகொள்ள திருந்திய வழிகாட்டுதல் மத்திய அரசினால் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அரசு ஆணை எண் 230, வேளாண்மை (ஏபி-1) துறை, நாள் 30-11-2011-இன்படி தமிழ்நாட்டில் ATMA அமைப்பு செயல்பட்டு வரும் 29 மாவட்டங்களில் தனியார் நிறுவனங்கள்மூலம் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட மற்றும் வட்டார அளவிலே 1,203 தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் அனைத்து மாவட்டங்களிலும் ATMA திட்ட ஆட்சிமன்றக் குழுவின் தலைவரான மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின்கீழ் தனியார் நிறுவனங்கள்மூலம் ஓராண்டுக் கால ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே தகுதிவாய்ந்த நபர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகிறார்கள். எனவே, ஓராண்டுக் கால ஒப்பந்த அடிப்படையில் அலுவலர்கள் நியமனம் செய்யப்படுவதால், நிர்ணயித்துள்ள இட ஒதுக்கீட்டைப் பின்பற்ற வேண்டிய அவசியம் எழவில்லை. இருப்பினும், ஒதுக்கீட்டு நடைமுறைக்கு அதிகமாக இத்திட்டத்தின்கீழ் இதுவரை 358 தாழ்த்தப்பட்ட மலை ஜாதியினருக்கு 34 சதவிகித அடிப்படையிலே பல்வேறு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இட ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் நாம் 69 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பின்பற்றி வருகிறோம். அதிலே மறுக்கப்பட்டதாக உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தற்போது இந்த ATMA திட்டத்திலே கலந்து கொண்டவர்களில், 19 சதவிகிதம் SC/ST மக்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும். ஆனால், அதிலே 34 சதவிகிதம் நாம் ஒதுக்கியிருக்கின்றோம். அதேபோல் M.B.C.-க்கு 20 சதவிகிதம் ஒதுக்கீடு செய்யவேண்டும். ஆனால், 23 சதவிகிதம் ஒதுக்கீடு செய்திருக்கின்றோம். B.C. வகுப்பினருக்கு 30 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய வேண்டும். ஆனால், 36 சதவிகிதம் ஒதுக்கீடு செய்திருக்கின்றோம். நீங்கள் 69 சதவிகிதம் இட ஒதுக்கீடு

2012 மே 15] [திரு. செ. தாமோதரன்]

கேட்டீர்கள். இந்தத் திட்டத்திலே *93* சதவிகித ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதென்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள். (குறுக்கீடு) இதிலே விளக்கம் வேண்டாம். (குறுக்கிடு) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் அதைத் தனியாக என்னிடம் கேளுங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து தனியாக என்னிடம் விளக்கம் சொல்லுங்கள்.*

(ஊ) செங்குன்றம் பகுதியிலிருந்து ஆந்திராவிற்கு ரேஷன் அரிசி கடத்தப்படுதல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை தமிழ்நாடு அரசின் பொது வினியோகத் திட்ட ரேஷன் அரிசி இரயில்கள்மூலம் அண்டை மாநிலமான ஆந்திராவிற்குக் கடத்தப்பட்டு, கள்ளச்சந்தையில் விற்பனை செய்வதைத் தடுக்கும் விதமாக, ஆந்திராவிற்குச் செல்லும் அனைத்து இரயில்களிலும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சார்ந்த 60 பெண் காவலர்கள் உதவியோடு தீவிர சோதனைகள் மேற்கொண்டு, இரயில்கள் மூலம் ரேஷன் அரிசி கடத்தப்படுவது தடுக்கப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டதால், கடத்தல்காரர்கள் பேருந்துகள்மூலம் ரேஷன் அரிசி கடத்தலில் ஈடுபட்டு வருவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினர், 12-5-2012 அன்று இரவு 9-30 மணியளவில் செங்குன்றம் சோதனைச் சாவடி அருகே வாகனத் தணிக்கை மேற்கொண்டிருந்தபொழுது, அவ்வழியாக சென்னை-நெல்லூர் சென்று கொண்டிருந்த ஆந்திர அரசுப் பேருந்தினை, அதாவது தடம் எண் 5110-பேருந்து எண்* AP *28-*Z *5739 என்கிற அந்தப் பேருந்தினை நிறுத்தி சோதனை செய்ததில், அதில் 50 கிலோ எடை கொண்ட 40 மூட்டைகள் ரேஷன் அரிசி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.*